DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

**S.C.No.26/2025**

Deposition of witness for Prosecution/Defence/Court : **P.W.3**

**Accused present**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.மணிமேகலை | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 27th day of July, 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது இராஜபாளையம் தாலுகா, சத்திரப்பட்டியில், கிழவன்கோவிலில் எனது கணவர் மணிகண்டன் என்பவருடன் வாடகை வீட்டில் வசித்து வருகிறேன். மேற்படி வாடகை வீடு அ.சா.1 அழகேந்திரன் என்பவருக்கு சொந்தமான வீடு ஆகும். எனது வீட்டின் அருகில் ராமர், அய்யப்பன், அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷ் ஆகியோர்கள் வசித்து வருகிறார்கள். இந்த வழக்கின் ஆஜர் எதிரி அய்யப்பனை எனக்கு தெரியும். 05.06.2024 அன்று இரவு 10.00 மணியளவில் அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷை இவ்வழக்கின் ஆஜர் எதிரி அய்யப்பன் என்பவர் கட்டையால் அடித்துக் கொண்டிருந்தார். அந்த இடத்தில் சம்பவத்தின்போது நானும், எனது கணவர் மணிகண்டன், ராமர், காளீஸ்வரி ஆகியோர்கள் இருந்தோம். அங்கு சென்று ஆஜர் எதிரி அய்யப்பனை வழக்கில் இறந்துபோன அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷை அடிக்க வேண்டாம் என்று தடுத்தோம். மேற்படி ஆஜர் எதிரி தாக்கியதில் இறந்து போன அய்யப்ப ஜோதி என்ற ரித்திசுக்கு இடது கண் புருவத்தில் இரத்த காயமும், வலது கை மணிக்கட்டில் ரத்தக்காயமும், முதுகு மற்றும் கால்களில் காயம் ஏற்பட்டது. அதன்பின்னர் அ.சா.1 அழகேந்திரன் ஆஜர் எதிரியை சத்தம்போட்டு அனுப்பி

வைத்தார். எங்களை இந்த விசயத்தில் தலையிடக்கூடாது என்று ஆஜர் எதிரி மிரட்டினார். அதன்பின்னர் 06.06.2024 அன்று காலை 6.00 மணிக்கு அ.சா.1 அழகேந்திரன் என்பவர் சத்தத்தைக் கேட்டு நானும், எனது கணவர் மணிகண்டன், காளீஸ்வரி, ராமர் ஆகியோர்கள் இறந்துபோன அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷை பார்த்தபோது, வாயில் நுரை தள்ளி, ரத்தக்காயங்களுடன் இறந்து கிடந்தார். மேற்படி வீட்டிற்குள் விஷ மருந்து வாடை வந்தது. அதன் பின்னர் அ.சா.1 அழகேந்திரன் இராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் எழுத்து மூலம் புகார் மனு கொடுத்தார். விசாரணைக்காக 06.06.2024 அன்று காலை 6.45 மணியளவில் சம்பவ இடத்திற்கு காவல் துறையினர் வருகை தந்தார்கள். அந்த விசாரணையின்போது, 06.06.2024 ம் தேதி அதிகாலை 1.00 மணியளவில் எனது கணவர் நாய் குளைக்கும் சத்தத்தை கேட்டு வெளியில் சென்று பார்த்துவிட்டு, மேற்படி வழக்கில் இறந்துபோன அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷ் வீட்டிற்கு முன்பாக வழக்கின் ஆஜர் எதிரி கையில் முள் கட்டையுடன் சுற்றித் திரிந்ததாக என்னிடம் கூறியதை நான் காவல் துறையினரிடம் சொன்னேன். மேற்படி விசாரணையில் இறந்துபோன அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷ் என்பவரை வழக்கின் ஆஜர் எதிரி அய்யப்பன் கொலை செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கிறோம் என்று காவல் துறையினர் விசாரணையில் கூறினேன். மேற்படி பிரேதத்தின்மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் என்னிடம் விசாரணை செய்தார்கள். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>

ஆஜர் எதிரி முன்னிலையில் சாட்சி பதிவு செய்யப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்திற்கு வருகை இல்லை. குறுக்குவிசாரணை இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

**S.C.No.26/2025**

Deposition of witness for Prosecution/Defence/Court : **P.W.2**

**Accused present**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.மணிகண்டன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 27th day of July, 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது இராஜபாளையம், சத்திரப்பட்டி, கிழவன்கோவிலில் வசித்து வருகிறேன். நான் வசித்துவரும் வீடு வாடகை வீடு ஆகும். மேற்படி வீடானது வழக்கின் அ.சா.1 அழகேந்திரன் என்பவருக்கு சொந்தமான வீடாகும். எனது வீட்டின் அருகில் வாடகைக்கு இருக்கும் நபர்கள் கார்மேகம், முத்து, எனது மனைவி மணிமேகலை, ஆட்டோகாரர் ஆறுமுகம் ஆகியோர்கள் வாடகைக்கு வசித்து வருகிறோம். கடந்த 05.06.2024 ம் தேதி இரவு 10.00 மணியளவில் எனது வீட்டின் பின்புறம் சத்தமாக கேட்டது, அங்கு சென்று பார்த்தபோது அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷ் என்பவரை ஆஜர் எதிரி அய்யப்பன் என்பவர் கட்டையால் அடித்து கொண்டிருந்தார். என்னிடம் காட்டப்படும் முள்விறகு கட்டைதான் சா.பொ.1 ஆகும். மேற்படி சான்று பொருளை கொண்டுதான் ஆஜர் எதிரி அய்யப்பன், வழக்கில் இறந்துபோன அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷை தாக்கினார். இடது பக்க கண் புருவத்தில் ரத்தக்காயமும், வலது கை மணிக்கட்டில் வீக்கக்காயமும், நெற்றியில் சிறிய ரத்தக்காயமும் ஏற்பட்டிருந்தது. அந்தசமயம்

மணிகண்டன், மணிமேகலை, ராமர், காளீஸ்வரி, அ.சா.1 ஆகியோர்கள் அங்கு இருந்தோம். மேற்படி வழக்கின் எதிரியை சத்தம்போட்டு அனுப்பிவிட்டோம். 06.06.2024 அன்று இரவு 1.00 மணியளவில் நாய் குளைத்து கொண்டிருந்ததால், வெளியே வந்து பார்த்தபோது, இவ்வழக்கில் கொலையுண்ட அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷ் என்பவது வீட்டினை வழக்கின் ஆஜர் எதிரி சா.பொ.1 பொருளுடன் சுற்றி வந்தார். அதன்பின்னர் மேற்படி நான் பார்த்த காட்சிகளை மணிமேகலையிடம் கூறினேன். 06.06.2024 ம் தேதி காலை 6.00 மணியளவில் அ.சா.1 சத்தம் போட்டுக் கொண்டிருந்தார். அதன்பின்னர் நானும், காளீஸ்வரி, ராமர், அழகேந்திரன், எனது மனைவி மணிமேகலை ஆகியோர்கள் மேற்படி இறந்துபோன அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷ் என்பவர் வீட்டிற்கு சென்று பார்த்தபோது இறந்துபோன நபர் வாயில் நுரை தள்ளியும், நெற்றியில் வீக்க காயத்துடனும், இடது கண் புருவத்தில் இரத்த காயத்துடனும், வலது காலில் ரத்த காயத்துடனும், முதுகில் காயங்களுடனும் இறந்து கிடந்தார். மேற்படி வீட்டில் மருந்து வாடை வந்தது. இது சம்பந்தமாக அ.சா.1 அழகேந்திரன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். மேற்படி சம்பவம் தொடர்பாக 06.06.2024 அன்று காலை 6.45 மணியளவில் ராஜபாளையம் தெற்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரணை செய்தார்கள். 05.06.2024 ம் தேதி அன்று மேற்படி சண்டையை விலக்கிவிடச் சென்ற எங்களை பார்த்து உங்களுக்கு என்ன, நான் இப்படித்தான் செய்வேன் என்று மிரட்டியதுடன் யாரும் தலையிடக்கூடாது என்று கூறியதுடன் மேற்படி அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷை பார்த்து வழக்கின் ஆஜர் எதிரி கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்து சென்றார். மேற்படி கொலையுண்ட அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷை ஆஜர் எதிரி அய்யப்பன் கொலை செய்திருப்பார் என்று சந்தேகம் இருப்பதாக காவல் ஆய்வாளர் அவர்களிடம் தெரிவித்தேன். அதன்பின்னர் ஆஜர் எதிரி அய்யப்பன் மேற்படி இறந்துபோன அய்யப்ப ஜோதி என்ற ரித்திஷ் என்பவரின் வாயில் விசத்தை ஊற்றிய டப்பா வீட்டிற்கு

அருகில்தான் உள்ளது என்று கூறி எங்களை தேட வைத்தார். இது சம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

ஆஜர் எதிரி முன்னிலையில் சாட்சி பதிவு செய்யப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்திற்கு வருகை இல்லை. குறுக்குவிசாரணை இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

**S.C.No.26/2025**

Deposition of witness for Prosecution/Defence/Court : **P.W.1**

**Accused present**

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.அழகேந்திரன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 27th day of July, 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது இராஜபாளையம் தாலுகா, சங்கரபாண்டியபுரம், கிழவன்கோவிலில் வசித்து வருகிறேன். நான் மாடு வளர்த்து வருகிறேன். இறந்துபோன அய்யப்ப ஜோதி என்ற நபர் எனது வீட்டில்தான் வாடகைக்கு வசித்து வந்தார். மேலும் எனக்கு சொந்தமான வீட்டில் ராமர், மணிகண்டன், மந்தாங்கினி, மூக்கம்மாள் ஆகியோர்கள் முன் வீட்டில் வாடகைக்கு வசித்து வருகிறார்கள். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி அய்யப்பன் இந்நீதிமன்றத்தில் உள்ளார். இந்த வழக்கின் எதிரி அய்யப்பனும், அய்யபன் தாயர் மகாலட்சுமியும் எனக்கு சொந்தமான வீட்டில் வாடகைக்கு வசித்து வந்தனர். 05.06.2024 ம் தேதி இரவு 10.00 மணியளவில் இறந்துபோன அய்யப்ப ஜோதி என்பருக்கும், வழக்கின் எதிரி அய்யப்பனுக்கும் சண்டை நடந்ததாக மந்தாங்கினி, மூக்கம்மாள், ராமர், மணிகண்டன் ஆகியோர்கள் என்னிடம் சண்டை நடந்த விபரத்தை சொன்னார்கள். இந்த வழக்கில் இறந்துபோன அய்யப்ப ஜோதி என்பவர் அவரது வீட்டில் அமர்ந்திருந்தார். நான் கேட்ட போது வழக்கின் எதிரி அய்யப்பன்

இறந்துபோன அய்யப்ப ஜோதியை எதுவும் கேட்காமல் கம்பாள் தன்னை தாக்கியதாகவும் கூறினார். வழக்கில் இறந்துபோன அய்யப்ப ஜோதியின் இடது கண் அருகில் ரத்தக்காயமும், கையில் காயம் இல்லை, அடித்ததாக கூறினார். நான் அய்யப்பனை சத்தம் போட்டேன், சண்டை போடக்கூடாது என்று கூறினேன். நான் மறுநாள் 06.06.2024ம் தேதி காலை 6.00 மணியளவில் அய்யப்பஜோதி வீட்டிற்கு சென்று பார்த்தபோது, வாயில் நுரை தள்ளி இறந்து கிடந்தார். அப்போது என்னுடன் மந்தாங்கினி, மூக்கம்மாள், மணிகண்டன், ராமர் ஆகியோர்கள் வந்தார்கள். இது தொடர்பாக நான் இராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.2** ஆகும். வழக்கில் இறந்துபோன அய்யப்ப ஜோதியின் வீட்டில் மருந்து வாடை வந்தது. போலிசார் என்னை விசாரித்தபோது வழக்கின் எதிரி அய்யப்பனுக்கும், இறந்துபோன அய்யப்ப ஜோதிக்கும் முதல் நாள் இரவு நடந்த சண்டையை பற்றி கூறினேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

ஆஜர் எதிரி முன்னிலையில் சாட்சி பதிவு செய்யப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்திற்கு வருகை இல்லை. குறுக்குவிசாரணை இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.